BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

## பிராம்ப்டன் நகரின் முதன் முதலான தீபாவளி விழாவைக் கொண்டாடுவோம்

பிராம்ப்டன், ON (அக்டோபர் 13, 2023) – பிராம்ப்டன் நகர நிர்வாகம் நகரின் முதன் முதலான தீபாவளித் திருவிழாவைக் கொண்டாட தனது குடியிருப்புவாசிகளை அழைக்கிறது.

ஒளியின் திருவிழா என்று அழைக்கப்படும் தீபாவளியானது, இருள் நீக்கி ஒளி பெற்ற வெற்றியைக் குறிக்கும் ஐந்து நாள் கொண்டாட்டமாகும். உலகெங்கிலும் உள்ள இந்துக்கள், ஜைனர்கள், சீக்கியர்கள் மற்றும் பௌத்தர்களால் இந்த பண்டிகை கொண்டாடப்படுகிறது. தீபாவளியைக் கொண்டாடுகின்ற சமூகத்தினர் தங்கள் வீடுகளை ஒளிவிளக்குகளால் (அகல் விளக்குகள்) ஒளிரச் செய்வார்கள் மற்றும் ரங்கோலிகள், வண்ணம் தோய்த்த அரிசி, மணல் அல்லது மலர் இதழ்களால் செய்யப்பட்ட கலைப்படைப்புகளை அவரவர் வீட்டுத் தரைகளில் படைப்புகளாக உருவாக்கி தங்கள் குடும்பங்களுக்கும் விருந்தினர்களுக்கும் நல்ல அதிர்ஷ்டத்தையும் செழிப்பையும் கொண்டு வருவார்கள்.

தீபாவளியைக் கொண்டாடும் வகையில், நகரம் தனது முதல் முதலான சமூகக் கொண்டாட்டத்திற்கு உபசரிப்பு வழங்குகிறது, மேலும் உள்ளூர் மற்றும் சர்வதேச கலைஞர்களின் நேரடி இசை மற்றும் நிகழ்ச்சிகளை இலவசமாகக் கண்டு களிக்க, குடும்பத்திற்கு நட்புறவான செயல்பாடுகளில் ஈடுபட, சுவையான உணவு கொடுக்கும் விற்பனையாளர்களின் உணவுண்ண, மற்றும் திகைப்பூட்டும் நகரத்தால் நடத்தப்படும் மிகப்பெரிய பட்டாசு வேடிக்கை – 15 நிமிட வானவேடிக்கை நிகழ்ச்சி - ஆகியவற்றைக் கண்டு மகிழ அனைவரையும் வரவேற்கிறது.

**தேதி:** ஞாயிற்றுக்கிழமை, நவம்பர் 12

**நேரம்:** மாலை 4 – 10

**நிகழிடம்:** செஸ்க்விசெண்டென்னியல் பூங்கா (Sesquicentennial Park), 11333 ப்ரமீலி ரோடு, ON.

**நிகழ்ச்சிக்கு சென்று வருவதற்கான போக்குவரத்து ஏற்பாடு**
சாலைகள் அடைப்பு பற்றிய முழு பட்டியல், போக்குவரத்து விருப்பத்தெரிவுகள் மற்றும் வாகனம் நிறுத்தும் விபரங்களுக்கு வருகை தரவும்: www.brampton.ca/diwali.

**இலவசமான பிராம்ப்டன் போக்குவரத்து ஷட்டில் ட்ரிப்புகள்**
ப்ராம்ப்டன் போக்குவரத்து அமைப்பானது இலவச ஷட்டில் சேவைகளை மாலை 4 மணிக்குத் தொடங்கி, எங்கள் நான்கு ஷட்டில் இடங்களில் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு 30 நிமிடங்களுக்கு ஒரு முறை

பயணத்தை இயக்கும் – அவை, மவுண்ட் பிளசன்ட் GO நிலையம், ஷெரிடான் கல்லூரி, கோர் மெடோஸ் சமூக மையம் மற்றும் சேவ் மேக்ஸ் (Save Max) விளையாட்டு மையம் ஆகியனவாகும்.

**பிராம்ப்டன் நகரில் தீபாவளி பண்டிகையின்போது, பட்டாசுகளில் இருந்து பாதுகாப்பு**
குடியிருப்புவாசிகளின் பாதுகாப்புதான் நகரத்தின் முதன்மையான முன்னுரிமை கொண்ட விஷயமாகும். வானவேடிக்கை தொடர்பான புதிய சட்டத்தின் கீழ், பிராம்ப்டனில் நகரம் நடத்தும் நிகழ்வுகளைத் தவிர, வேறெங்கும் பட்டாசுகளை வெடிக்க அனுமதி இல்லை. இந்த நிகழ்வுதான் தீபாவளியைக் கொண்டாடுவதற்கும், நிகழ்வைக் குறிக்கும் பட்டாசுகளின் அழகை அனுபவிக்கவும் மக்களை அனுமதிக்கிறது.

நகரம் அதன் பெருந்தன்மையான நிதி ஆதரவாளர்களான CAA மற்றும் Tim Hortons அவர்களின் ஆதரவிற்கு நன்றி தெரிவிக்கிறது.

முழு விபரங்களுக்கு வருகை தரவும், www.brampton.ca/diwali.

**அறிஞர் கூற்றுக்கள்**

நமது முதன் முதலான சமூகரீதியான தீபாவளி கொண்டாட்டத்தை நடத்துவதில் நாங்கள் பரவசமடைகிறோம். நமது குடியிருப்பாளர்களில் பலரும் தீபாவளியைக் கொண்டாடுகிறார்கள், மேலும், இந்தக் கொண்டாட்டத்தை ஒரு சமூகமாக ஒன்றிணைந்து செய்வதை நான் எதிர்நோக்குகிறேன். இந்த கொண்டாட்டத்தில் கலந்துகொள்ளவும், திகைப்பூட்டும் வானவேடிக்கை உட்பட தீபாவளியின் பாரம்பரியத்தை அனுபவிக்கவும் குடியிருப்புவாசிகள் அழைக்கப்படுகிறார்கள்.
- *பேட்ரிக் பிரவுன், மேயர், பிராம்ப்டன் நகரம்*

“பிராம்ப்டன் நகரம் தனது முதன் முதலான தீபாவளி கொண்டாட்டத்தை நடத்துவதில் நான் மிகவும் பரவசமடைகிறேன். நமது சமூகத்தைச் சேர்ந்த பலரும் தீபாவளியைக் கொண்டாடுபவர்கள் ஆவர்; நவம்பர் 12 அன்று அவர்களுடன் மகிழ்ச்சியான மாலைப் பொழுதில் கலந்துகொள்ள ஆவலுடன் காத்திருக்கிறேன். அனைவரையும் தங்கள் இல்லத்தை விட்டு வெளியே வந்து பிராம்ப்டனில் ஒரு சமூகமாக தீபாவளியைக் கொண்டாடுமாறு நான் ஊக்குவிக்கிறேன்!
- *ஹர்கிரத் சிங், துணை மேயர், பிராம்ப்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 90,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது**. நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம்,

தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்புகள்**
பிராம்ப்டன் நகர பன்முக கலாச்சர ஊடகம்
multiculturalmedia@brampton.ca